Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror
www.tamilmirror.lk

TUESDAY, DECEMBER 31, 2024

செவ்வாய்க்கிழமை, 31 டிசெம்பர் 2024 | ஒளி: 10 கதிர்: 126 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE



# புதிய இடத்தில் ஜனாதிபதி நிதியம்

இதுவரை கொழும்பு 10, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, லேக்ஹவுஸ் கட்டிடத்தின் 3ஆவது மாடியில் இயங்கி வந்த ஜனாதிபதி நிதியத்தின் அலுவலகம், 2025 ஜனவரி 01ஆம் திகதி முதல் புதிய இடத்தில் நிறுவப்படவுள்ளது.

இதன்படி, ஜனாதிபதி நிதியத்தின் புதிய அலுவலக வளாகம் கொழும்பு 01, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடத்தின் தரைத்தளத்தில் நிறுவப்படுகிறது.

தொடர்ச்சி P2

# மின்சாரம் தாக்கியதில் மூவர் மரணம்

ரஸீன் ரஸ்மின்

புத்தளம் - நுரைச்சோலை, மாம்புரி பகுதியில் ஞாயிற்றுக்கிழமை(29) மாலை வீடு நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் நால்வர் மீது மின்சாரம் தாக்கியதில் சம்பவ இடத்திலேயே மூவர் உயிரிழந்துள்ளதாக நுரைச்சோலை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

புத்தளம் - சோல்டன் மற்றும் மதீனா நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மூவரே இவ்வாறு மின்சார தாக்குதலுக்குள்ளாகி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். நுரைச்சோலை மாம்புரி பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வரும் குறித்த கட்டிடத்தில் இரும்பிலான பலாஞ்சு எனும் ஏணியின் மீது ஏறி, வேலை செய்து கொண்டிருந்த போதே மின்சாரத் தாக்கியுள்ளது.

முழுச் செய்தி P2





## ஊடகங்களுக்கு

# “தணிக்கை விதியோம்”

ஊடகங்களுக்கு தணிக்கையை விதிக்கும் எண்ணம் புதிய அரசாங்கத்திற்கு இல்லை என சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுவதாகவும் அமைச்சர் கூறினார்.

இலங்கை ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் குழுவுடன் ஊடக அமைச்சில், திங்கட்கிழமை (30) கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன் போதே சுகாதார மற்றும் ஊடகத்துறை அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை ஒலிபரப்பாளர்கள் சங்கத்தின் யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை அமைச்சரிடம் முன்வைத்து பல கோரிக்கைகள் குறித்து கலந்துரையாடுமாறு ஒலிபரப்பாளர்களின் ஒன்றியம் விடுத்த கோரிக்கைக்கு அமைய இந்த கலந்துரையாடல் அழைக்கப்பட்டது.

ஊடகங்களும் அரசாங்கமும் புரிந்துணர்வுடன் செயற்பட வேண்டும், மக்களுக்காக ஊடகங்களை முறையாக நிர்வகிக்கும் பொறுப்பை அரசாங்கம் நிறைவேற்றுகிறது, ஊடகங்கள் மீது தணிக்கை விதிக்கும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அமைச்சர் டொக்டர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

# புதிய தளபதிகள் நியமனம்



இலங்கை இராணுவம் மற்றும் கடற்படைகளுக்கு புதிய தளபதிகள் திங்கட்கிழமை (30) நியமிக்கப்பட்டுள்ளனர். அதன்படி, புதிய இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை இராணுவத்தின் 25ஆவது இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்ட மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ, இலங்கை இராணுவத்தின் பிரதிப் பிரதானியாக பணியாற்றி வந்தார்.

முழுச் செய்தி P2

# கர்தினால் ரஞ்சித் பற்றிய ஒலிப்பதிவால் சர்ச்சை



ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் பிரபலமாகிய நாமல் குமார, கொழும்பு பேராயர் கர்தினால் ரஞ்சித் குறித்து சமூக ஊடகங்களில் வெளியான செய்திகள் தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து மீண்டும் சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளார்.

தேசிய கத்தோலிக்க தொடர்பாடல் பணிப்பாளர் அருட்தந்தை ஜூட் கிரிசாந்த சமூக ஊடகங்களில் வெளியான தகவல் தொடர்பில் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவில் (சிஐடி) முறைப்பாடு செய்துள்ளார்.

முழுச் செய்தி P2



# கையெழுத்து போராட்டம்



எஸ்.ஆர்.லெம்பேட்

அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்தி திங்கட்கிழமை (30) அன்று மன்னாரில் கையெழுத்து போராட்டம் இடம்பெற்றுள்ளது.

முழுச் செய்தி P2

# ஜனவரி 1இல் இருந்து ‘தூய்மையான இலங்கை’



அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள ‘தூய்மையான இலங்கை’ வேலைத்திட்டம் 2025ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

இந்த வேலைத்திட்டமானது ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் இடம்பெறவுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

‘தூய்மையான இலங்கை’ திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலணியொன்று அண்மையில் ஸ்தாபிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் செயலாளர் டாக்டர் என்.எஸ்.குமாநாயக்க, பதில் பொலிஸ் மா அதிபர் மற்றும் முப்படைகளின் தளபதிகள் உட்பட 18 பேர் ஜனாதிபதி செயலணியில் உள்ளடக்கப்பட்டுள்ளனர்.

‘தூய்மையான இலங்கை’ திட்டத்தைத் திட்டமிடல், வழிகாட்டுதல், நடைமுறைப்படுத்துதல், முன்னேற்றத்தை மீளாய்வு செய்தல் மற்றும் குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவு செய்தல் என்பன இந்த ஜனாதிபதி செயலணியின் பொறுப்புகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# மஹிந்தவின் புதிய பேச்சாளர்



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் உத்தியோகபூர்வ ஊடகப் பேச்சாளராக சட்டத்தரணி ரவீந்திர மனோஜ் கமகே கடந்த 20ஆம் திகதி அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனக் கடிதம் விஜயராமவிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷ வின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து திங்கட்கிழமை (30) கையளிக்கப்பட்டுள்ளது.

# பாடசாலை நாட்கள் குறைப்பு



இவ்வருடம் (2025ஆம் ஆண்டு) பாடசாலை நாட்களை 181 நாட்களாகக் குறைப்பதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

புதிய வருடத்தில் காணப்படும் அதிகளவிலான பொது விடுமுறைகள் மற்றும் முதலாம் தவணை தொடங்குவதில் காணப்படும் தாமதம் உள்ளிட்ட காரணங்களால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

முழுச் செய்தி P2

# தேங்காய் எண்ணெய் தொடர்பில் முறைப்பாடு

பயன்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய்யை சுத்திகரித்து மீண்டும் சந்தைக்கு விநியோகிக்கும் மோசடி தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் சமீர முத்துகுட இதனைத் தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலத்தை மையமாகக் கொண்டு நாடளாவிய ரீதியில் வர்த்தக நிலையங்களைச் சோதனை செய்யும் நடவடிக்கைகள் கடந்த முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளன.


இதன்போது, தரமற்ற உணவுகளை விற்பனை செய்த சுமார் 450 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தொடரபட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பயன்படுத்தப்பட்ட தேங்காய் எண்ணெய்யை சுத்திகரித்து மீண்டும் சந்தைக்கு விநியோகிக்கும் மோசடி தொடர்பில் முறைப்பாடுகள் பதிவாகியுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.



PAGE 1 தொடர்ச்சிகள்

# மின்சாரம் தாக்கியதில் மூவர் மரணம்



இதன்போது, அங்கு 11 பேருக்கும் அதிகமான தொழிலாளர்கள் பணிபுரிந்து கொண்டிருந்ததாக சொல்லப்படுகிறது. குறித்த வீட்டை நிர்மாணிப்பதற்காக அந்த வீட்டின் உரிமையாளர் தனியார் ஒப்பந்ததாரர் ஒருவருக்கு வழங்கியதுடன், அந்த ஒப்பந்தக்காரர் பல தொழிலாளர்களை ஈடுபடுத்தி அந்த வீட்டின் வேலைகளைச் செய்து வந்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற போது, இரும்பில் செய்யப்பட்ட பலாஞ்சு மீது மின்சாரம் தாக்கியதில் அங்கு கட்டிட நிர்மாண பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் மீதும் மின்சாரம் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

குறித்த இளைஞர் மின்சார தாக்குதலுக்கு உள்ளானதையடுத்து, அந்த இளைஞனை காப்பாற்றும் நோக்கில் அங்கிருந்தவர்கள் முயற்சி செய்த போது, அம்மூவரில் இருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் தூக்கி வீசப்பட்ட நிலையில், உயிர் பிழைத்துள்ளார் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்கு விஜயம் செய்த புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி தேசமான்ய பதுர்தீன் முஹம்மத் ஹிஸாம், சம்பவ இடத்திலேயே மரண விசாரணைகளை முன்னெடுத்துள்ளார்.

மின்சார தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்த மூவரின் சடலங்களும் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பில் நுரைச்சோலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# புதிய இடத்தில் ஜனாதிபதி நிதியம்

ஜனாதிபதி நிதியத்தின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக வரும் பொதுமக்கள், 2025 ஜனவரி 1 முதல், கொழும்பு 01, ஜனாதிபதி மாவத்தை, ஜனாதிபதி மாளிகைக்கு முன்பாக அமைந்துள்ள ஸ்டேண்டர்ட் சார்டர்ட் கட்டிடத்தின் தரைத்தளத்தில் உள்ள அலுவலக வளாகத்திற்குச் சென்று சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.



# கையெழுத்து போராட்டம்

போராளிகளின் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பேருந்து தரிப்பிடத்தின் முன்பாக கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ், கைது செய்யப்பட்டு நீண்ட காலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளையும் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு சமூக மயப்படுத்தப்பட்ட பின்னர், நீதி மன்றத்தினால் விடுதலை செய்யப்பட்ட பின்பும் மீண்டும் கைது செய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள போராளிகளையும் புதிய அரசாங்கம் விடுவிக்க வேண்டும் என வலியுறுத்தியே குறித்த கையெழுத்துப் போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இதில் அருட் தந்தையர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், மீனவ அமைப்புகளின் பிரதிநிதிகள் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகள் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டு கையெழுத்திட்டுள்ளனர்.









# கர்தினால் ரஞ்சித் பற்றிய ஒலிப்பதிவால் சர்ச்சை

இது தொடர்பில் டெய்லி மிரர், அருட்தந்தை ஜூட் கிரிசாந்தவை வினவிய போது, கர்தினாலிடம் குற்றப்புலனாய்வு பிரிவினர் வாக்குமூலம் பதிவு செய்ததாக அவர் உறுதிப்படுத்தினார்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவின் வசம் உள்ள ஒரு ஒலிப்பதிவு கர்தினால் ரஞ்சித்தின் நடத்தை குறித்து விமர்சிப்பதாக நாமல் குமார கடந்த வாரம் ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார். இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தில் முறைப்பாடு செய்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். “எனது இச் செயற்பாடு கர்தினாலைப் பாதுகாப்பதே தவிர, அவர் மீது சேறு பூசுவது அல்ல,” என்று அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில், டெய்லி மிரர் ராமநாயக்கவை தொடர்பு கொண்டபோது,



கர்தினால் ரஞ்சித் பற்றிய ஒலிப்பதிவு கிளிப் எதுவும் தன்னிடம் இல்லை என்று கூறினார். “கர்தினால் ரஞ்சித்தின் நடத்தை பற்றிய ஒலிப்பதிவு கிளிப் எதுவும் என்னிடம் இல்லை. சில நபர்கள் செயற்கை நுண்ணறிவை (AI) பயன்படுத்தி நான் உட்பட சிலர் மீது சேறு பூசுவதற்கு அவ்வாறு போலியான ஒன்றை உருவாக்கி இருக்கலாம்” என்று அவர் கூறினார்.

“நான் நாமல் குமாரவை ஒருபோதும் சந்தித்ததில்லை, யாருக்கும் ஒலிப்பதிவு கிளிப்களை வழங்கவில்லை, சமூக ஊடகங்களில் எந்த கிளிப்களையும் வெளியிடவில்லை,” என்று அவர் மேலும் கூறினார்.

கர்தினாலை அவமதிக்கும் வகையிலான எந்த ஒலிப்பதிவுகள் தம்மிடம் இருந்தாலும் அவற்றை ஒப்படைக்குமாறு சில யூடியூப் சேனல்கள் மற்றும் சில தொலைக்காட்சி சேனல்களுக்கு கொழும்பு நீதவான் நீதிமன்ற இலக்கம்-8 நீதவான் தரங்க மல்வத்த உத்தரவிட்டுள்ளார்.

கர்தினால் மற்றும் தேவாலயத்தை அவமதித்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டின் பேரில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அருட்தந்தை ஜூட், நீதிமன்றங்களில் மனுத் தாக்கல் செய்தமையும் குறிப்பிடத்தக்கது.

# புதிய தளபதிகள் நியமனம்



அத்துடன், பாதுகாப்பு சேவைகள் கட்டளை மற்றும் பணியாளர்கள் கல்லூரியின் தளபதியாகவும் பணியாற்றினார்.

இந்த நிலையில், இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் விக்கும் லியனகேவின் இரண்டாவது சேவை நீடிப்பு காலம் நிறைவடைந்த நிலையில், அந்த பதவிக்கு மேஜர் ஜெனரல் லசந்த ரொட்ரிகோ நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, இலங்கை கடற்படையின் புதிய தளபதியாக ரியர் அட்மிரல் காஞ்சன பனாகொட நியமிக்கப்பட்டுள்ளதுடன், அவர், ஆகஸ்ட் 2024 முதல் இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரியாக பணியாற்றினார்.

இலங்கை கடற்படையின் தலைமை அதிகாரியாக நியமிக்கபடுவதற்கு முன்னர், அவர் கிழக்கு கடற்படை தளபதியாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை நாட்கள் குறைப்பு

முன்னதாக, வருடத்தில் 210 நாட்கள் பாடசாலை நாட்களாகக் காணப்பட்ட நிலையில் அரச பாடசாலைகள் மற்றும் அரசஅங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகள் நடைபெறும் நாட்களை 181 ஆக குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 2024ஆம் ஆண்டுக்கான மூன்றாம் தவணை ஜனவரி மாதம் 02ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறுவதுடன், 2025ஆம் ஆண்டுக்கான முதலாம் தவணை ஜனவரி 27ஆம் திகதி



ஆரம்பமாகவுள்ளது.

அத்துடன், 2025ஆம் ஆண்டிற்கான 26 பொது விடுமுறை நாட்களில், நான்கு மட்டுமே வார இறுதி நாட்களில் உள்ளதுடன், ஏனைய அனைத்து விடுமுறை நாட்களும் வார நாட்களில் அமைந்துள்ளதால் 210 நாட்களுக்கு பாடசாலைகளை நடத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சிறுபோக சேதங்களுக்கு...



கடந்த நாட்களில் நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் வறட்சி மற்றும் காட்டு யானைகளால் சிறுபோகத்தில் ஏற்பட்ட சேதங்களுக்கு இழப்பீடு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, எதிர்வரும் ஜனவரி மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் இழப்பீடுகளை வழங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதி சபை தெரிவித்துள்ளது.

கடந்த மார்ச் மற்றும் ஒக்டோபர் மாதங்களுக்கு இடையில் பயிர் செய்கையின் போது ஏற்படும் சேதங்கள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னதாக, பாதிக்கப்பட்ட 80 சதவீதமான விவசாயிகளுக்கு சுமார் 80 மில்லியன் ரூபாய் நட்டஈடு ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில், இழப்பீடுகள் ஜனவரி 5ஆம் திகதிக்குள் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பெரும்போக இழப்பீடு வரும் பெப்ரவரி மாதத்தில் வழங்கப்படும் என தகவல் வெளியாகியுள்ளது.

# மன்னாரில் காணாமல் போனவர் சடலமாக மீட்பு

எஸ்.ஆர்.லெம்பேட்

மன்னார் சௌத் பார் கடற்பரப்பில் மிதந்து வந்த சடலத்தை திங்கட்கிழமை (30) காலை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

மன்னார்- சாந்திபுரம் பகுதியைச் சேர்ந்த சதாசிவம் ராசு (வயது-59) என்ற குடும்பஸ்தர் என உறவினர்களினால் அடையாளம் காணப்பட்டுள்ளார். அவர் கடந்த 28 ஆம் திகதி முதல் காணாமல் போன நிலையில் குடும்ப உறவினர்கள் அவரை தேடி வந்துள்ளனர்.

மீனவர்கள் கடற்படையினருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலத்தை மீட்ட கடற்படையினர் சௌத் பார் கடற்கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பொங்கலுக்கு பின்னர் தீர்மானம்

மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதி தீர்மானத்தை எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கவுள்ளதாக இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதற்கான பொதுமக்களின் கருத்துகளைக் கேட்டறியும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்படுவதாக ஆணைக்குழு கூறியுள்ளது.

செவ்வாய்க்கிழமை (30) ஊவா மாகாணத்திலும் எதிர்வரும் 3ஆம் திகதி முதல் ஏனைய மாகாணங்களிலும் பொதுமக்கள் கருத்துகளைக் கேட்டறியும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நடவடிக்கையின் பின்னர் எடுக்கப்படும் இறுதி தீர்மானம் எதிர்வரும் 17ஆம் திகதி அறிவிக்கப்படுமென ஆணைக்குழு உறுதிப்படுத்தியுள்ளது.

இதனிடையே, மின்சார சபை ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவையும் வழங்கி மின்சாரக் கட்டணத்தையும் 6 வீதத்தால் குறைக்க முடியும் என இலங்கை மின்சார சபையின் பொதுஜன முற்போக்கு ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதற்கான பரிந்துரைகள் கடந்த அரசாங்கத்தின் காலப்பகுதியிலேயே முன்வைக்கப்பட்டுள்ளதாக அந்த சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

# 413 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 413 பேருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பண்டிகை காலத்தின் போது, ஏற்படும் வாகன விபத்துகளைக் குறைப்பதற்காகப் பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய விசேட போக்குவரத்து சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி, கவனக் குறைவாகவும் அபாயகரமாகவும் வாகனம் செலுத்திய 49 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், வீதி அனுமதிப்பத்திரம் மற்றும் போக்குவரத்து விதிகளை மீறியமை உள்ளிட்ட குற்றங்களுக்காக 7,676 சாரதிகளுக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# மகரஜோதி பெருவிழா

வ.சக்தி

மட்டக்களப்பு மாவட்டம், குருக்கள்மடம் கிராமத்தில் அமைந்துள்ள ஐயப்பன் சன்னிதானத்தில் மகரஜோதி பெருவிழா ஞாயிற்றுக்கிழமை (29) இடம்பெற்றுள்ளது. அதிகாலை 5.45 மணிக்கு விசேட மகரஜோதிகிரியை வழிபாடுகளுடன் ஆரம்பமாகி, ஐயப்பனுக்கு விசேட அபிஷேகம் நடைபெற்று, பக்தி பூர்வமான பஜனை நிகழ்வுகள், பின்னர் 18 படி பூஜையும் இடம்பெற்றுள்ளது.

குருக்கள்மடம் செல்லக்கதிர்காம சுவாமி ஆலயத்திலிருந்து ஐயப்பன் சன்னிதானம் வரையில் நடைபவனியாக ஆபரணம் எடுத்து வரும் நிகழ்வும் இதன்போது நடைபெற்றுள்ளது.


தொடர்ந்து வன்புலி வாகனத்தில், எழுந்தருளிய ஐயப்பனுக்குப் பக்தி பூர்வமான மகரஜோதி பெருவிழா இடம்பெற்றுள்ளது.

ஐயப்பனின் கிரியை பூஜை நிகழ்வுகள் யாவும் தர்மசாஸ்தா புனித மாலை குழு குருசாமி ஜெசிந்திரா குரு தலைமையில், விஸ்வ பிரம்ம ஸ்ரீ செ.சுபேஸ்வரன் குருசுவாமி ஐயா, ஆலய பிரதம செ.சிவகரன் குழுவினரால் பக்தி பூர்வமாக இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.
















# “பண்டிகை முன்பணத்தை 40,000 ரூபாயாக அதிகரிக்கவும்”

மொஹொமட் ஆஸிக்

அரச ஊழியர்களுக்கு தற்போத வழங்கப் படும் பண்டிகை முன்பணமான 10,000 ரூபாவை இவ்வருடம் 40,000 ரூபாவாக அதிகரிக்குமாறு இலங்கை அரச உத்தியோகத்தர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவர் சுமித் கொடிகார அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அரசிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுப்பதாக கூறிய அவர், 10,000 ரூபாய் போன்ற தொகையை வைத்து இக் காலத்தில் எதுவும் செய்ய முடியாது என்றும், இம்முறை பண்டிகை முன்பணமாகக் குறைந்த பட்சம் 40,000 ரூபாயை அரசு அதிகாரிகளுக்கு வழங்க வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

மேலும், அரசு பாடசாலை மாணவர்களுக்கு வழங்க உத்தேசித்துள்ள 6,000 ரூபாய் உதவித்தொகையை அரசு அலுவலர்களின் பிள்ளைகள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் பாரபட்சமின்றி வழங்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டுள்ளதுடன், அனைத்து பாடசாலை மாணவர்களுக்கும் சீருடை மற்றும் பாடப்புத்தகங்களை வழங்குவது போன்று அனைத்து மாணவர்களுக்கும் இந்த தொகையை வழங்குமாறு ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.



# புதிய பிரதம செயலாளர் கடமைகளை பொறுப்பேற்றார்

சிவா ஸ்ரீ தரராவ்

சப்ரகமுவ மாகாண சபையின் பிரதம செயலாளராகக் கடமையாற்றிய மஹிந்த எஸ்.வீரசூரிய ஓய்வு பெற்றதையடுத்து, சப்ரகமுவ மாகாணத்தின் புதிய பிரதம செயலாளராக ஈ.கே.ஏ.சுனிதா நியமிக்கப்பட்டுள்ளார். அவர் சப்ரகமுவ சபையில் திங்கட்கிழமை (30) அன்று தனது கடமைகளை பொறுப்பேற்றார்.

இதற்கான நியமனக் கடிதம் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவினால் ஈ.கே.ஏ.சுனிதாவிடம் ஜனாதிபதி செயலக வளாகத்தில் வைத்துக் கையளிக்கப்பட்டுள்ளது.

திருமதி ஈ.கே.ஏ.சுனிதா ருஹுனு பல்கலைக்கழகத்தில் சிங்களத்தில் இளங்கலைப் பட்டப்படிப்பை இரண்டாம் தர உயர் சித்தியுடன் முடித்துள்ளார், மேலும் களனி பல்கலைக்கழகத்தில் சமூகவியலில் முது மாணிப் பட்டத்தையும் பெற்றுள்ளார்.

1998 ஆம் ஆண்டு இலங்கை நிர்வாக சேவையில் இணைந்த ஈ.கே.ஏ. சுனிதா ஹெரேனாதொட்ட, கெனமல்பல , லுனுகம்வெஹெர, ஒகேவல, ஹம்பாந்தோட்டை ஆகிய பிரதேச செயலாளராகவும், ஹம்பாந்தோட்டை, மொனராகலை மேலதிக மாவட்ட அரசாங்க அதிபராகவும், அம்பாறை, அம்பாந்தோட்டை மொனராகலை திவினகும பிராந்திய பணிப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார்.



அதன்படி, ஈ.கே.ஏ.சுனிதா சப்ரகமுவ மாகாண சபையின் செயலாளராகவும், மாகாண விவசாய அமைச்சின் செயலாளராகவும், மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். ஈ.கே.ஏ.சுனிதா சப்ரகமுவ மாகாண சபையின் பதினாறாவது பிரதம செயலாளர் ஆவார்.

இந்நிகழ்வில், சப்ரகமுவ மாகாண ஆளுநர் சம்பா ஜானகி ராஜரத்ன, சப்ரகமுவ மாகாண அமைச்சுக்களின் செயலாளர்களான சுஜீவ போதிமான்ன, சாமர பமுனு ஆராச்சி, சஞ்சீவ கொடல்லவத்த, ஆளுநரின் செயலாளர் தர்ஷன சமரசேகர, பிரதி பிரதம செயலாளர் திலினி தர்மதாச மற்றும் அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் வந்தவர் சிக்கினார்



சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 59 இலட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து விமான நிலைய சுங்க அதிகாரிகளால் திங்கட்கிழமை (30) கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம், சிலாபம் பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய வர்த்தகர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் துபாயிலிருந்து காலை 08.00 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளதுடன், இதன்போது விமான நிலைய அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் சந்தேக நபர் கொண்டு வந்த பயணப் பொதிகளிலிருந்து 39,800 வெளிநாட்டு சிகரட்டுகள் அடங்கிய 199 சிகரெட்டு காட்டுன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை விமான நிலைய சுங்க அதிகாரிகள் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 16 அடி நீளமான முதலை சிக்கியது



ஏ.எச்.ஏ. ஹுஸைன்

மட்டக்களப்பு - புளியந்தீவு, வாவிக்கரை வீதி இரண்டில் சுமார் 16 அடி நீளமான முதலையொன்று பொதுமக்களால் உயிருடன் பிடிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில தினங்களாக மட்டக்களப்பு வாவியில் சஞ்சரித்த இந்த முதலை ஞாயிற்றுக்கிழமை காலை கரைக்கு வந்து புளியந்தீவு கிராமத்திற்குள் நுழைய முற்பட்ட போது இதனை மடக்கிப் பிடித்த பொதுமக்கள் முதலையை வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைத்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக வாவிக் கரையோரப் பகுதியில் மேயும் ஆடு, மாடு உள்ளிட்ட கால்நடைகளை இந்த முதலை வேட்டையாடியுள்ளதாகவும் அண்மையில் வவுணதீவு பகுதியில் ஒருவர் முதலையால் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வாலியில் முதலை சஞ்சரிப்பதால் மீனவர்கள் தமது ஜீவனோபாயத்தை முன்னெடுக்க முடியாதுள்ளது என தெரிவித்த பொது மக்கள் முதலையை, முதலைகள் சரணாலயத்திற்கு அனுப்பி வைக்குமாறும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# நீதி கோரி ஆர்ப்பாட்டம்







இலங்கையில் உள்நாட்டு யுத்தம் நடைபெற்ற காலப்பகுதியில் வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக நீதி கோரி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் திங்கட்கிழமை (30) அன்று ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

வடக்கு மாகாணத்தின் மாவட்டங்கள் தோறும் மாதாந்தம் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டத்தில் ஒரு அங்கமாகவே இது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

யாழ். முனியப்பர் ஆலய முன்றலில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த ஆர்ப்பாட்டம் ஊர்வலமாக யாழ். பிரதான வீதி மற்றும் காங்கேசன்துறை வீதியூடாக சென்று யாழ் மத்திய பேருந்து நிலையத்தை அடைந்துள்ளது.

இதையடுத்து யாழ் மத்திய பேருந்து நிலையத்தில் ஒன்று கூடிய வாழும் உறவுகள் தமது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலை குறித்து சர்வதேசமே தீர்வை வழங்க வேண்டும் போன்ற சுலோகங்களை வலியுறுத்தி போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

# குப்பைகளை சமூக மயமாக்காமல் இருப்பது முக்கியம்

ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் வழங்கப்பட்ட விசேட ஆணையை மிகவும் கவனமாகப் படிப்பது முக்கியம் என்பதை மீண்டும் வலியுறுத்துகிறோம். எனவே, அந்த ஆணையை யதார்த்தமாகக் கையாள்வது அரசாங்கத்தின் தலையாய பொறுப்பாக மாறியுள்ளது. தற்போதைய அரசாங்கம், தனித்துவத்தை விடக் கூட்டுத்தன்மையை மதிக்கும் மக்கள் சமூகத்தை நிறுவுவதாக வாக்குறுதி அளித்து ஆட்சிக்கு வந்தது என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

இல்லையேல், மிக எளிமையான, அற்ப விடயங்களினால் அந்நியப்படும் அபாயம் உள்ளது என்பதை அதிக நம்பிக்கை கொண்ட மக்கள் சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் ஆணை மற்றும் மக்கள் மனதை அடையாளம் காண்பது மிகவும் முக்கியம் என்று நாங்கள் நினைக்கிறோம். இந்த இரு தரப்பு தொடர்பு ஒப்பந்தம் மிகவும் முக்கியமானது.

உடனடி நடவடிக்கைகள், நீண்ட கால நடவடிக்கைகள், என்ன செய்ய முடியும், என்ன செய்யக்கூடாது என்பதற்கான வரம்புகளை அரசாங்கம் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். இத்தகைய நெகிழ்வான ஊடகப் பயன்பாட்டைப் பேணுவது, சமூகப் பயன்பாடு மிகவும் முக்கியமானது. அப்போதுதான் மக்களிடையே உள்ள தொடர்பு முரண்பாட்டை நீக்க முடியும். நியாயமான, நட்பான விமர்சனம் மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்பதை அங்கீகரிப்பது அவசியம்.

பல அதிகாரத்துவ மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் அரசாங்கத்தின் திட்டத்தைச் சீர்குலைக்க வேலை செய்கிறார்கள் என்பதை அங்கீகரிப்பது மிகவும் முக்கியமானது. இதற்கிடையில், பல்வேறு வகையான செய்திகளை உருவாக்குவது முதன்மையானது. கடமைச் சுற்றறிக்கைகள் மூலம் அரசாங்கத்தின் இருப்பை அழிக்கும் வகையில் அதிகாரத்துவப் போக்கு செயற்படுவதை அவதானிக்க முடிகிறது. எனவே, எதிரி தரப்பு மற்றும் நட்பு பக்கத்தை வேறுபடுத்துவது மிகவும் முக்கியம்.

மக்கள் விரும்பத்தகாத முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் போது வெளிப்புற அழுத்தத்தை நிர்வகிக்கவும் முடியும். விரும்பத்தகாத முடிவுகளை எடுப்பது ஒரு நம்பிக்கையான இலக்குக்கு அவசியம். அரசியல் சர்வதேச நட்பு அவர்களிடையே முக்கியமானது. அதிகாரத்துவ வர்க்கத்துடனான உள் ஆதரவையும் குடிமக்களுடன் வெளிப்புற உறவையும் நிர்வகிப்பது அவசியம். ஒரு அரசியல் இயக்கத்திற்கு ஒழுக்கம் இன்றியமையாதது என்பதை அந்த நோக்கத்திற்கான அமைப்புகள் நம்ப வேண்டும், அது அரசாங்க அதிகாரிகளுக்கு இன்றியமையாத பிரச்சினையாகும். அரசாங்கம் இன்னமும் நாட்டை சரியான பாதையில் கொண்டு செல்ல முயற்சிக்கின்றது. இது மிகவும் சிக்கலான செயலாகும்.

அழிந்து போன ஒரு நாட்டை திடீரென மேலே உயர்த்த முடியாது என்பதை சமுதாயம் புரிந்து கொள்ள வேண்டும். இது ஒரு நீண்ட செயல்முறை. அதற்கு அனைவரின் ஆதரவையும் எதிர்பார்க்க வேண்டும். சமூகத்தின் உயர் மட்டத்திற்கு உயர்த்தப்பட்டவர்கள், சமூகத்தால் கவனிக்கப்பட்டவர்கள், தங்கள் தனிப்பட்ட வாழ்க்கையின் குப்பைகளை சமூக மயமாக்காமல் இருப்பது மிகவும் முக்கியம். சமூகத்தில் இதுபோன்ற பல குப்பைகள் உள்ளன.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# மாகாண சபைத் தேர்தல்: சில யதார்த்தங்கள்

மொஹமட் பாதுஷா

**அரசாங்கங்கள் பொதுவாக ஏனைய தேர்தல்களைக் காலம் தாழ்த்தியேனும் நடத்தினாலும், மாகாண சபைத் தேர்தலை நடத்துவதில் மட்டும் ஒரு தயக்கம் காட்டுவதையும், சாக்குப்போக்குச் சொல்லி இழுத்தடிப்பதையும் தொடர்ச்சியாக அவதானித்து வருகின்றோம்.**

**இந்த நிலையில் நாளை பிறக்கப் போகும் புதுவருடம் முடிவடைவதற்கு இடையில் மாகாண சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படும் என்று புதிய அரசாங்கம் கூறியுள்ளது.**

13ஆவது திருத்தம், மாகாண சபை முறைமை போன்றவற்றுக்கு எதிரான கருத்துக்களை ஆளும் தரப்பில் உள்ள சிலர் வெளிப்படுத்தி, முரண்நகைகளை ஏற்படுத்தி வருகின்ற சூழலில், உண்மையிலேயே மாகாண சபை தேர்தலை நடத்துவதில் அனுரகுமார அரசாங்கம் உறுதியுடன் இருக்கின்றதா? அல்லது இன்னும் ஒரு இறுதி நிலைப்பாட்டை எடுக்கவில்லையா? என்ற சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரசியலமைப்பில் கொண்டு வரப்பட்ட 13ஆவது திருத்தத்தின் கீழ் இலங்கையில் மாகாண சபை முறைமை உருவானது. சொல்லப்போனால், இந்தியாவைத் திருப்திப்படுத்துவதற்காகவும், ஆயுதங்களைத் தூக்கியிருந்த தமிழ் ஆயுத குழுக்கள் மற்றும் மக்களை ஆறுதல் படுத்துவதற்காகவும் எடுக்கப்பட்ட ஒரு நகர்வாக இதனைச் சொல்ல முடியும்.

உண்மையில் இறைமையுள்ள ஒரு நாட்டின் அரசியலமைப்பில் உள்ள விடயங்களை அமுல்படுத்துமாறு இன்னுமொரு நாடு அழுத்தம் கொடுக்க இயலாது.

ஆனால், மேற்குறிப்பிட்ட அடிப்படையில் 13ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டதாலும், ஏதோ ஒரு விதத்தில் இராஜதந்திர பொறிக்குள் இலங்கை மாட்டிக் கொண்டதாலும், இந்தியா இது விடயத்தில் தொடர்ந்தும் அழுத்தங்களைக் கொடுத்து வருகின்றது.

இருப்பினும், 13ஆவது திருத்தத்தையோ, மாகாணங்களுக்கான அதிகாரங்களையோ வழங்கி பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதற்கு வெளிநாடுகள் உண்மையிலேயே மனதார விரும்புகின்றனவா? அல்லது இரண்டு பக்கமும் நகர்வுகளைச் செய்து கொண்டு இவ்விவகாரத்தைப் பிச்சைக்காரனின் புண்ணைப்போல வைத்திருக்கவும் அதன்மூலம் இலங்கையை தமது பிடிக்குள் வைத்திருக்கவும் விரும்புகின்றார்களா? என்ற வினாவை அரசியல் அவதானிகள் எழுப்புகின்றார்கள்.

மாகாண சபை முறைமை அடிப்படையில் எதற்காகக் கொண்டு வரப்பட்டது? அது வினைத்திறனாக செயற்பட்டதா என்பதெல்லாம் ஒருபுறமிருக்க, ஏதோ ஒரு வகையில் பல நன்மைகளை அது கொண்டு வந்தது.

வடக்கு, கிழக்கு மக்கள் மட்டுமல்ல நாட்டின் 9 மாகாண மக்களும் மறைமுகமாக இதன் வழிவந்த அனுகூலங்களை அனுபவித்தனர்.

மத்திய அரசாங்கம் தனக்கு எழக்கூடிய பாதுகாப்பு மற்றும் நிலபுல அடிப்படையிலான அச்சுறுத்தல்களைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும், வடக்கு, கிழக்கில் தமக்கு எதிரான தரப்பின் நிழல் அதிகாரம் உருவாகிவிடும் போன்ற பல காரணங்களினாலும் பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை மாகாண சபைகளுக்கு வழங்கவில்லை என கூறலாம்.

மாகாண சபை முறைமையை 'ஒரு வெள்ளை யானை' என்று ஆரம்பத்திலிருந்தே சில தரப்புக்கள் கூறி வருகின்றன.

இதனால் எந்தப் பலனும் இல்லை, இது ஒரு கற்பனையான கட்டமைப்பு அல்லது அதிக செலவுத்தனமானது என்பதை உணர்த்துவதற்காக இந்த உவமானம் பயன்படுத்தப்படுகின்றது. ஆனால், இந்தக் கருத்தைப் பகுதி அளவில்தான் ஏற்றுக்கொள்ள முடியும்.

மாகாண சபைகள் இயங்கிய காலத்தில் ஏதோ பல நல்ல விடயங்கள் நடந்திருக்கின்றன. ஜே.வி.பி. தாக்கல் செய்த வழக்கினால் வடக்கும், கிழக்கும் பிரிந்த பிறகு குறிப்பாகக் கிழக்கு மாகாணம் பல நன்மைகளை மாகாண சபை ஊடாக அனுபவித்தது எனலாம்.

ஆனால், இப்போது எல்லா மாகாண சபைகளின் பதவிக்காலமும் முடிவடைந்து பல வருடங்கள் கடந்து விட்டன. ஆனால், மாகாண சபையில் ஆட்சி அதிகாரம் இல்லை என்றாலும், சபைகளின் திணைக்களங்கள் இருக்கின்றன. குறைந்த வினைத்திறனுடன் இயங்குகின்றன.

சொல்லப் போனால், அரசியல் அதிகார ரீதியில் இப்போதுதான் உண்மையில் மாகாண சபைகள் வெள்ளை யானைகளாக மாறியிருக்கின்றன.

இந்தப் பின்னணியில்தான் மீண்டும் மாகாண சபை தேர்தல்கள் பற்றிய கருத்தாடல்கள் எழுந்திருக்கின்றன.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா அண்மையில் மாகாண சபை முறைமைக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இது குறிப்பாக ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவுக்கு பெரும் சிக்கலை ஏற்படுத்தியது.

இதனால் இக்கருத்தை அரசாங்கம் உடனடியாக மறுத்துரைத்ததுடன், அடுத்த வருடம் நிச்சயம் மாகாண சபை தேர்தல் நடைபெறும் என்றும் ஜனாதிபதி உத்தரவாதம் வழங்கியுள்ளார். புதிய அரசியலமைப்பு வரும் வரை இந்த ஏற்பாடு மாறாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி பல விடயங்களில் முன்பின் முரணான கருத்துக்களை என்.பி.பி. அரசாங்கத்தில் பலர் கூறி வருகின்றமை தனிக் கதை.

இங்கு சில யதார்த்தங்களை விளங்கிக் கொள்ள வேண்டும். குறிப்பாக முஸ்லிம் மக்கள் இதன் ஆழ அகலங்களை விளங்கிக் கொள்வதுடன், தமிழ் அரசியல்வாதிகளையும் இந்தியா போன்ற வெளிநாடுகளையும் கண்மூடித்தனமாக நம்பிக் கொண்டிருக்கின்ற தமிழ் மக்கள் நடைமுறைச் சாத்தியங்களையும் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது.

இலங்கையில் மாகாண சபை முறைமையால் சிறுபான்மை மக்கள் மட்டுமன்றி, தென்னிலங்கை சிங்கள மக்களும் நன்மை அடைந்தார்கள் என்பதை மறுக்கவியலாது. ஆனால், மாகாண சபைகள் காட்டிய 'பில்ட்அப்' அளவுக்கு வினைத்திறனாக செயற்படவில்லை எனலாம்.

தேர்தல் நடைபெற்றாலும் கூட, காணி, பொலிஸ் அதிகாரங்களை எந்த அரசாங்கமும் வழங்க முனவராது. காணி அதிகாரங்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி சுயநிர்ணயம், தனி மாநிலம் என்ற நிலைமைகள் உருவாகுமோ என்று ஆட்சியாளர்கள் சிந்திப்பார்கள்.

அதேபோன்று, பொலிஸ் அதிகாரம் வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல, அதற்கு வெளியிலும் மத்திய அரசாங்கத்திற்கு ஆபத்தாக வருமோ என்றுதான் ஆட்சியாளர்கள் சிந்திப்பார்கள். எனவே, காணி அதிகாரம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டாலும், பொலிஸ் அதிகாரத்தை எந்த அரசும் வழங்காது.

மாகாண சபை முறைமை மற்றும் 13ஆவது திருத்தம் பற்றிய ஜே.வி.பியின் அடிப்படைக் கோட்பாடு என்ன என்பதை நாடறியும். அத்துடன், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டதை முஸ்லிம்கள் வரவேற்கின்றார்கள் என்பது ஒருபுறமிருக்க இதனைச் செய்தது ஜே.வி.பி. என்பதையும் மறந்து விடக் கூடாது.

ஆனால், என்ன செய்வது? இப்போது ஜே.வி.பி. தேசிய மக்கள் சக்தியாகத் தனது பிம்பத்தை மக்கள் முன் நிறுத்தியுள்ளது. இனவாதம், பாடுபாடுகளற்ற நாடு. எல்லோருக்கும் பொதுவான நடைமுறைகள் என பல கோஷங்கள் தேர்தல் வெற்றியைத் தந்துள்ளன.

வடக்கு மக்கள் என்.பி.பிக்கு வாக்களித்துள்ளமையே அரசாங்கத்திற்கு உண்மையில் பெரு வெற்றி எனலாம். இதனை அவர்களே கூறுகின்றனர். இது அரசாங்கத்திற்குப் பலமாக அமைந்திருப்பது மட்டுமன்றி, தமிழ் மக்கள் விடயத்தில் ஒரு கடப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ளது எனலாம்.

ஆனால், வழக்கமான தமிழ் தேசிய கட்சிகளை விட என்.பி.பிக்கு தமிழ் மக்கள் அதிகளவில் வாக்களித்துள்ளமை, மாகாண சபை, 13ஆவது திருத்தம், தீர்வு உள்ளிட்ட தமிழ் மக்களின் விவகாரங்களை அரசாங்கம் உரிமையுடன் கையாள்வதற்கும், 'எமக்கே அந்த மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றார்கள்' என்று சர்வதேசத்திற்குக் கூறுவதற்கும் வாய்ப்பாக அமையலாம்.

மாகாண சபை தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் உண்மையில் விரும்புகின்றதா இல்லையா என்பது ஒருபுறமிருக்க, இதற்கான சட்டத்தைத் திருத்த வேண்டிய தேவையும் உள்ளது. அத்துடன், மாகாண சபைகளுக்கான எல்லை நிர்ணயமும் ஒரு தடையாக இருப்பதாக அரச தரப்பில் கூறப்பட்டிருக்கின்றது.

இதேவேளை, மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்தினால், 13ஆவது திருத்தத்தை முழுமாக நடைமுறைப்படுத்தச் சொல்லி புதுடில்லியும் வெளிநாடுகளும் அழுத்தம் கொடுக்கும், வடக்கையும், கிழக்கையும் இணைக்கச் சொல்லிக் கோரி வருகின்ற தமிழ் அரசியல்வாதிகள் இன்னும் அழுத்தம் கொடுப்பார்கள் என்றும் அரசாங்கம் சிந்திக்கலாம்.

முஸ்லிம்கள் வடக்கு, கிழக்கை இணைக்க கொஞ்சம் கூட விரும்பவில்லை. ஏற்கெனவே நீதிமன்ற வழக்கின் மூலம் வடகிழக்கை வடக்கு, கிழக்காகப் பிரித்த கட்சியே மீண்டும் அதனை இணைப்பதும் சாத்தியமில்லை. இந்தியா சொல்வதெற்கெல்லாம் தலையாட்டுவதும் சீனா ஆதரவு அரசென நம்பப்படும் இவ்வரசாங்கத்தினால் இலகுவில் சாத்தியமாகக் கூடியதும் இல்லை.

எனவே, மேற்குறிப்பிட்ட உள்மனக் கேள்விகளுக்கு எப்போது அனுரகுமார அரசாங்கம் தமக்குள் விடை காணுமோ, இந்தப் பிரச்சினைகள் தொடர்பில் எப்போது ஒருமித்த இறுதி முடிவுக்கு வருமோ அதுவரையும் மாகாண சபை தேர்தல் அறிவிக்கப்படுவதற்கு வாய்ப்பில்லை.

ஒருவேளை, அதற்கான திகதி அறிவிக்கப்பட்டு விட்டது என்றால், மேலே குறிப்பிட்ட விவகாரங்களை எப்படிக் கையாள்வது என்பதற்கான சூத்திரத்தை ஜே.வி.பியும் என்.பி.பியும் தயாரித்து விட்டன என்பதே யதர்த்தமாக இருக்கும்.



## வாழ்வியல் தரிசனம்

ஒருவரின் அல்லது பலரின் சுயமதிப்பை உடைப்பதற்கு என்றே சில விசமிகள் காத்திருக்கின்றார்கள். பொறாமை காரணமாக, பிறர் பற்றி அவதூறு பேசுவதையே குறியாகக் கொண்டிருப்பவர்கள் சமூக விரோதிகளாவர்.

வேண்டுமென்றே அபாண்டமான செய்திகளைப் பரப்புவது, பிறர் குடும்ப விடயங்களில் தலையிடுவது, வதந்தி பரப்புவது, எல்லாமே நடந்தபடிதான் இருக்கும். செவிகளைக் கண்டபடி நகர்த்தலாகாது. எல்லா விதமான மாந்தர்களும் எங்கள் முன்னால் உலாவருகின்றார்கள்.

எவருடன் நட்புக் கொள்வது? எவரைக் கண்டுகொள்ளாமல் விடுவது என்பதை உங்கள் அனுபவ ஞானம் மூலம் கண்டுகொள்ள முடியும். காலங்களைச் சரிவரப் பயன்படுத்த வேண்டும். மனிதன் மனிதனையே விழுங்குகின்ற காலம் இது. தங்கள் சுயநலத்துக்காக எதையும் செய்வார்கள்.

ஒருவரின் ஆளுமைகளை அனுபவங்களே சொல்லிக் கொடுக்கின்றன. இயற்கையாகவே மனிதர்களுக்குப் புத்தி உண்டு; சிந்திக்கும் திறனும் உண்டு. நிதானம், ஆராய்வு, செயல் மாந்தர்களுக்குப் பிரதானமானது.

நன்றி-பருத்தியூர் பால.வயிரவநாதன்

## கடிதங்கள்

# பெயர் பலகை வேண்டும்



தலவாக்கலை பேருந்து நிலைய கட்டிடத்தில் பொருத்தப்பட்டுள்ள பிரதான பெயர்ப் பலகை உடைந்து பல மாதங்களாகியும் அதற்குப் பதிலாக புதிய பெயர்ப் பலகையைப் பொருத்துவதற்கு இதுவரை பொறுப்பான திணைக்களம் நடவடிக்கை எடுக்கவில்லை என தலவாக்கலை பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேலும், பேருந்து நிலைய கட்டிடத்தில் பொருத்தப்பட்டிருந்த பிரதான பெயர்ப் பலகையில் எழுத்துக்கள் அச்சிட்டுக் காணப்பட்ட பெனர் கிழிந்து காணப்படுவதோடு, பெயர்ப் பலகையின் பின்புறம் மட்டும் எஞ்சியுள்ளதாகவும் மக்கள் கூறுகின்றனர்.

இதனால், வெளியூர்களிலிருந்து தலவாக்கலை நகருக்கு வரும் பயணிகள், சாரதிகள் மற்றும் ஏனைய பணியாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும், பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள பிரதான பெயர்ப் பலகையை விரைவில் சரி செய்யுமாறு தலவாக்கலை நகர வாசிகள் மேலும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

- பி.கேதீஸ்




# வருடாந்த ஒன்று கூடல்

கிழக்கின் பழம்பெரும் கழகமான காரைதீவு விளையாட்டுக் கழகத்தினதும் (KSC) விபுலானந்த சனசமூக நிலையத்தினதும் 2024ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு சனிக்கிழமை (28) இரவு இடம்பெற்றது.

கழகத் தலைவர் றோட்டரியன் எந்திரி வி.விஜயசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடிஸ்வரன் கலந்து கொண்டதுடன் சிறப்பு அதிதிகளாக கழகப்போசர்களான அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெகராஜன், முன்னாள் பிரதேச செயலாளர் எஸ்.இராமகிருஸ்ணன், உத்தரவு பெற்ற நில அளவையாளர் வி.இராஜேந்திரன், ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி..சகாதேவராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

– வி.ரி.சகாதேவராஜா



# உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சீன அரசினால் வழங்கப்பட்ட உலர் உணவு பொதிகள் அடங்கிய ஒரு தொகுதி சனிக்கிழமை (29) அன்று மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள சீனத் தூதுவர் கி சென்கொங் (Qi zhen kong) மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ள அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக “சீனாவின் சகோதர பாசம்” எனும் தொனிப் பொருளின் கீழ் உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜயந்த லால் ரட்ணசேகர வழிகாட்டுதலின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் வைத்துக் குறித்த உலர் உணவு பொதிகள் அரசாங்க அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

– எம்.எஸ்.எம்.நூர்தீன்








# கலை நிகழ்ச்சி

அட்டாளைச்சேனை விஷ்டம் அகடமி ஆங்கில பாலர் பாடசாலையின் விடுகை விழாவும், கலை நிகழ்ச்சியும் லொயிட்ஸ் விழா மண்டபத்தில் சனிக்கிழமை(28) நடைபெற்றது.

பாடசாலையின் முகாமைத்துவ பணிப்பாளர் ஏ.எம்.இர்பான் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஏ.எம்.நௌபர்டீன், அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல், பிரதம அதிதிகளாகவும் உதவி கல்வி பணிப்பாளர் ஏ.எல்.பாயிஸ், சொக்கமோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜே.றியாஸ் அதிபர்களான ஓ.எல்.எம்.றிஸ்வான், எஸ்.எம்,றஹீம், ஏ.கே.நழீம், எம்.எச்.அப்துல் றஹூமான் கௌரவ அதிதிகளாகவும், பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்களான எம்.ஐ.றியாஸ், ஐ.எல்.எம்.றபீக் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

போட்டி நிகழ்வுகளில் கலந்து கொண்டு வெற்றியீட்டிய மாணவர்களுக்கு அதிதிகளினால் பரிசு பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கப்பட்டதுடன் அதிதிகளின் உரைகளும் இடம் பெற்றன.

– எம்.எப்.றிபாஸ்



# நிவாரண உதவிகள் வழங்கி வைப்பு



மட்டக்களப்பு மாவட்டம் மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தினால் 90 இலட்சம் பெறுமதியான வெள்ள நிவாரணப் பொதிகள் 2700 குடும்பங்களுக்கு மண்டூர் கந்தசுவாமி ஆலயத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை(29) வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள இடரினால் பாதிக்கப்பட்ட மண்டூர் பிரதேச மக்களுக்கு இந்த நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வு போரதீவுபற்று பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதனின் மேற்பார்வையின் கீழ், 2,700 குடும்பங்களுக்கு 90 இலட்சம் நிதி பெறுமதியான உலர் உணவு நிவாரண பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன.

– வ.சக்தி



# மீண்டும் தமன்னா?

ரஜினிகாந்த் நடித்த ‘ஜெயிலர்’ திரைப்படத்தில் நடிகை தமன்னா ஒரு சிய கேரக்டரில் நடித்ததுடன் பாடலொன்றுக்கு நடனமாடினார். இந்த நிலையில், ரஜினியின் அடுத்த படத்திலும் தமன்னா நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

ரஜினிகாந்த் தற்போது லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் உருவாகி வரும் ‘கூலி’ திரைப்படத்தில் நடித்துக் கொண்டிருக்கிறார். அடுத்ததாக, அவர் நெல்சன் இயக்கத்தில் உருவாகும் ‘ஜெயிலர் 2’ படத்தில் நடிக்க உள்ளார்.

இந்த படத்தின் ஆரம்பகட்ட வேலைகள் தொடங்கி விட்டதாகவும், லொகேஷன் பார்க்கும் பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறப்படுகிறது.

இந்நிலையில், முதல் பாகத்தில் ஒரு சின்ன கேரக்டரில் நடித்த தமன்னா, இரண்டாம் பாகத்திலும் ஒரு முக்கியமான கேரக்டரில் நடிக்க இருப்பதாகத் தெரிகிறது. அது மட்டுமின்றி, பிரபல தெலுங்கு நடிகை ஸ்ரீநிதி ஷெட்டி இந்த படத்தில் இணைகிறார் என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் இந்த படத்தின் படப்பிடிப்பு தொடங்க இருப்பதாகக் கூறப்படுகிறது.




சுருதிஹாசனின்

# கடவுள் நம்பிக்கை

தமிழ், தெலுங்கில் பிரபல நடிகையாக வலம் வரும் கமல்ஹாசன் மகளான சுருதிஹாசன் தற்போது சொந்த வாழ்க்கை அனுபவங்களைப் பகிர்ந்து வருகிறார்.

அந்தவகையில், சுருதிஹாசன் தனக்குக் கடவுள் நம்பிக்கை அதிகம் என்று தெரிவித்து உள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்,

‘கடவுள் சக்தியை நம்புகிறேன். கடவுள் மீது நான் வைத்த நம்பிக்கைதான் வாழ்க்கையில் என்னை வலிமையாக்கியது. எனது வீடு ஒரு நாத்திக இல்லமாக இருந்தது. எனது தந்தை நாத்திகவாதி. இதனால் வளரும்போது கடவுள்



என்ற கருத்து எங்களுக்கு இருந்தது இல்லை. ஒரு கட்டத்தில் கடவுள் நம்பிக்கையை எனக்குள் நானே கண்டுபிடித்தேன். நான் முதலில் கோவிலுக்குச் சென்றது மிகவும் சிறந்த அனுபவமாக இருந்தது. அந்த அனுபவத்தை இன்றுவரை விரும்புகிறேன்’ என்றார்.





# மீண்டும் ‘மாஸ்டர்’

கடந்த 2021ஆம் ஆண்டு லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் வெளிவந்த ‘மாஸ்டர்’ படத்தில் வில்லனாக விஜய் சேதுபதி மிரட்டினார்.

இப்படத்தில் நாயகியாக மாளவிகா மோகனன் நடித்திருந்தார். மேலும், நாசர், அர்ஜுன் தாஸ், ஆண்ட்ரியா, சாந்தனு, சஞ்சீவ், ஸ்ரீநாத், தீனா உள்ளிட்ட பலரும் நடித்திருந்தனர். அனிருத் இப்படத்திற்கு இசையமைத்தார்.

இப்படம் வெளியாகி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. இந்த நிலையில், ஆங்கில புத்தாண்டையொட்டி ‘மாஸ்டர்’ ரீ-ரிலீஸ் செய்யப்படுகிறது. இதனால் ரசிகர்கள் உற்சாக மிகுதியில் உள்ளனர்

‘தி பேமிலி மேன் 3’

# படப்பிடிப்பு நிறைவு



பிரபல ஹிந்தி நடிகர் மனோஜ் பாஜ்பாய், பிரியாமணி நடிப்பில் கடந்த 2019ஆம் ஆண்டு ‘தி பேமிலி மேன்’ வெப் தொடர், அமேசான் பிரைமில் வெளியானது. பின்னர் இதன் இரண்டாவது சீசன் 2021ஆம் ஆண்டு வெளியானது.

அதில் மனோஜ் பாஜ்பாய், பிரியாமணி ஆகியோருடன் சமந்தாவும் நடித்திருந்தார். தற்போது இதன் 3ஆவது சீசனும் உருவாகி வருகிறது.

இதில், மனோஜ் பாஜ்பாய், பிரியாமணி, ஷரிப் ஹாஷ்மி, ஆஷ்லேஷா தாக்கூர் மற்றும் வேதாந்த் சின்ஹா ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்.

இந்நிலையில், இப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்துள்ளதாக நடிகர் மனோஜ் பாஜ்பாய் தனது சமூக வலைதளப்பக்கத்தில் தெரிவித்துள்ளார். படப்பிடிப்பு நிறைவடைந்ததையடுத்து கேக் வெட்டி கொண்டாடிய புகைப்படத்தை அதனுடன் பகிர்ந்துள்ளார்.

2024ஆம் ஆண்டின் இறுதித் தினமான இன்றுடன் இந்த ஆண்டு நிறைவுக்கு வருகின்றது

# நாளை புலரும் பொழுது புத்தாண்டு

பெரியசாமிப்பிள்ளை செல்வராஜ்,
முன்னாள் ராஜதந்திரி

**உலக நாடுகள் புதிய 2025ஆம் ஆண்டினை வரவேற்பதற்கு தம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டிருக்கின்றன. 2024ஆம் ஆண்டானது சர்வதேச ரீதியில் எண்ணற்ற நிகழ்வுகளைச் சந்தித்துள்ளது. அந்த வகையில், 2024ஆம் ஆண்டு உலகில் இடம் பெற்ற சில முக்கிய நிகழ்வுகளை மீட்டுப் பார்ப்பதே இந்தப் பதிவின் நோக்கமாகும்.**




2024ஆம் வருடமானது உலகளவில் மிகப் பெரிய தேர்தல் வருடமாகத் திகழ்ந்தது. சுமார் அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளில் வசிக்கும் மக்கள் அதாவது உலக சனத் தொகையில் 50 சதவீதத்துக்கு மேற்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடுகள் 2024ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முகங் கொடுத்தன.

அமெரிக்கா, பிரிட்டன், மெக்சிகோ, பாகிஸ்தான், இந்தியா, ஸ்ரீலங்கா, இந்தோனேசியா, தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் புதிய தலைவர்களைத் தெரிவு செய்தன.

இந்தத் தேர்தல்கள் உலக ரீதியாக ஒரு மாறுபாட்டினை வெளிப்படுத்தியதோடு, தேசியம், பொருளாதார சீர்திருத்தங்கள், ஆகியவற்றை முன்னிலைப்படுத்துவதாக அமைந்திருந்தது.

உலக நாடுகளில் இடம்பெற்ற தேர்தல்களானது அந்தந்த நாடுகளின் தேசிய அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியது மாத்திரமல்லாது, சர்வதேச உறவுகளிலும் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தியது என கருத இடமுண்டு.

மேலும் ரஷ்யா- யுக்ரைன், இஸ்ரேல்- ஹமாஸ் யுத்தங்கள், அதன் தொடர்ச்சியாக மத்திய கிழக்கில் ஏற்பட்ட போர் பதற்றங்கள், சூடான் மற்றும் பல நாடுகளில் நிலவும் பதற்றங்கள் என்பன தொடர்ச்சியாக நடைபெற்று வரும் யுத்தங்களாகக் கருதப்படுகின்றன. இதற்குத் தீர்வு காண சர்வதேச ரீதியாக எந்த விதமான வழிவகைகளும் தென்படவில்லை என்பதே இன்றைய யதார்த்தம்.

தென் சீனக் கடற்பரப்பில் நிலவுகின்ற பதற்ற நிலைமையானது அதனை அண்டிய நாடுகளில் குறிப்பாக பிலிப்பைன்ஸ், வியட்நாம் போன்ற நாடுகளில் ஒரு பதற்ற நிலையினை உருவாக்கியது எனலாம்.

இவற்றைத் தவிர உலக ரீதியாக மாறி வருகின்ற காலநிலை மாற்றம், நாடுகளுக்கு இடையிலான குடி பெயர்வுகள், யுத்தங்கள் காரணமாகப் பெருமளவு சிறார்களின் இறப்புக்கள், உணவு, உடை, உறையுள் இன்றி, அகதிகளாக மாறுகின்ற மக்களின் நிலைமைகள், செயற்கை நுண்ணறிவின் வளர்ச்சி போன்றன உலகின் போக்கில் ஒரு பெரும் மாற்றத்தினை ஏற்படுத்தினவெனக் கருத இடமுண்டு.

### பங்களாதேஷ்

ஜனவரி மாதம் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் பங்களாதேஷ் பிரதமரான ஷேக் ஹசீனாவின் தலைமையிலான அவாமி லீக் கட்சி 223 இடங்களில் அமோக வெற்றி பெற்று ஐந்தாவது முறையாக அவர் பிரதமராகப் பதவியேற்றார்.

ஆயினும், ஆகஸ்ட் மாதம் அந்நாட்டில் இடம் பெற்ற அரசியல் எழுச்சியின் காரணமாக அவர் தனது பதவியினை ராஜினாமா செய்து விட்டு இந்தியாவில் தஞ்சமடைய நேரிட்டது.

இடைக்கால அரசாங்கமானது நோபல் பரிசு பெற்ற முகமது யூனுஸ் தலைமையில் அமைக்கப்பட்டதானது, பங்களாதேஷின் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்கத் திருப்புமுனையாகக் கருதப்படுகிறது. அங்கு அதிகரித்து வரும் இந்துக்களுக்கு எதிரான வன்முறைகள் இந்தியா- பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளின் நல்லுறவுகளில் ஒரு விரிசலினை ஏற்படுத்துவதாகக் காணப்படுகின்றது

### பாகிஸ்தான்

பாகிஸ்தானில் பெப்ரவரி மாதம் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலில் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் தெஹ்ரீக்-இ-இன்சாஃப் கட்சி ஆதரவு வேட்பாளர்கள் 95 இடங்களைக் கைப்பற்றி முதலிடத்தினை வகித்தனர். ஆயினும், 64 தொகுதிகளில் மட்டுமே வெற்றி பெற்ற பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியானது பாகிஸ்தான் மக்கள் கட்சியுடன் இணைந்து புதிய அரசை அமைத்தது. அந்தக் கட்சியின் தலைவர் ஷெபாஸ் ஷெரீப் இரண்டாவது முறையாகப் பிரதமராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

### ரஷ்யா

கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற ரஷ்ய ஜனாதிபதித் தேர்தலில் விளாடிமிர் புட்டின் 87 வீத வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளார்.

யுக்ரைனில் ரஷ்யாவின் சிறப்பு இராணுவ நடவடிக்கைக்கு முன்னுரிமை, ரஷ்யாவின் இராணுவத்தைப் பலப்படுத்துவது ஆகியனவற்றை உறுதிப்படுத்துவது அவசியமெனத் தனது ஆதரவாளர்கள் மத்தியில் தேர்தலின் பின்னர் குறிப்பிட்டிருந்தது நோக்கப்பட வேண்டியது ஆகும்.

### மெக்சிகோ

வட அமெரிக்க நாடான மெக்சிகோவின் 200 ஆண்டு கால தேர்தல் வரலாற்றில் முதல் பெண் அதிபராக யூத இனப் பெண்மணியான கிளாடியா ஷேன்பாம் தெரிவு செய்யப்பட்டிருந்தார்.

ரோமன் கத்தோலிக்க சமூகப் பிரிவைச் சார்ந்த கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாக கொண்ட மெக்சிகோவில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற தேர்தலில் மெக்சிகோவின் ஆளுங்கட்சியான மொரேனா கட்சி (இடதுசாரி) சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளார்.

உலகின் இரண்டாவது ரோமன் கத்தோலிக்க மக்கள் தொகையைக் கொண்டுள்ள நாடு மெக்சிகோ ஆகும்.

### இஸ்ரேல் – ஹமாஸ் யுத்தம்

2024ஆம் ஆண்டில் இஸ்ரேல் தனது இராணுவ செயற்பாடுகளை லெபனான், ஈரான், சிரியா, யேமன் போன்ற நாடுகளுக்கு விஸ்தரித்து, தனது இராணுவ வலிமையை உலகுக்கு வெளிப்படுத்த முற்பட்டதெனக் கருதலாம். ஹமாஸ் இயக்கத்துக்கு எதிராக காசாவில் தனது தாக்குதலைத் தொடர்ந்து கொண்டிருந்த அதே வேளை, இஸ்ரேல், லெபனானில் உள்ள ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு எதிராகவும் தமது போரினை முடுக்கி விட்டது.

அதன் தொடர்ச்சியாக, தமது தேசத்திற்கு எதிராக செயற்பட்ட பல தலைவர்களையும் கொன்றது.

இஸ்ரேல்-ஹமாஸ் அமைப்பின் தலைவரான இஸ்மாயில் ஹனியேயை ஈரான் தலைநகர் தெஹ்ரானில் வைத்துக் கொன்றதனை இஸ்ரேல் ஒப்புக் கொண்டது. செப்டெம்பர் மாதமளவில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவரான ஹசன் நஸ்ரல்லாவை வான்வெளித் தாக்குதலின் மூலம் கொன்றது. தொடர்ந்து ஹமாஸ் இயக்கத் தலைவரான யஹ்யா சின்வரையும் அழித்தது.

ஈரானுக்கு எதிராக வான்வெளித் தாக்குதலை மேற் கொண்டு வந்த இஸ்ரேலானது தற்போது தொடர்ச்சியாக யேமனில் உள்ள ஹவுதி படையினர் மீதும் தாக்குதலைத் தொடர்கின்றது.

தனது நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பது அவசியமென இஸ்ரேல் தொடர்ச்சியாகக் கூறி வந்ததனையும் அவதானிக்க முடிந்தது.

ஈரான், ஹமாஸ், ஹிஸ்புல்லா, ஹவுதி போன்ற இயக்கங்கள் இஸ்ரேலை நோக்கி தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டன. அதன் தொடர்ச்சியாக இஸ்ரேலும் வான்வழித் தாக்குதல்களை மேற் கொண்டது குறிப்பிடத்தக்கது. பரஸ்பர தாக்குதலால் மத்திய கிழக்கு பிராந்தியமானது தொடர்ந்தும் ஒரு பதற்ற நிலையில் இருந்ததனை அவதானிக்க முடிந்தது.

### ஐக்கிய இராச்சியம்

2024ஆம் ஆண்டு ஜூலை மாதம் நடைபெற்ற இங்கிலாந்து பாராளுமன்றத் தேர்தலில் பதினான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தொழிலாளர் கட்சி அங்கு ஆட்சியைக் கைப்பற்றி, அந்நாட்டின் பிரதமராக தொழிலாளர் கட்சித் தலைவர் கியர் ஸ்டாமர் பதவியேற்றார்.

பிரதமர் ரிஷி சுனக் தலைமையிலான கன்சர்வேட்டிவ் கட்சி தேர்தலில் படுதோல்வி அடைந்தது குறிப்பிடத்தக்கது.

### இந்தியா–கனடா இராஜதந்திர உறவுகள்

கனேடிய பிரஜையும், காலிஸ்தான் செயற்பாட்டாளருமான ஹர்தீப் சிங் நிஜ்ஜார் கொல்லப்பட்டதில் இந்தியாவுக்குப் பங்கிருப்பதாகக் கனடா குற்றஞ் சாட்டியதனைத் தொடர்ந்து,

இந்தியாவிற்கும் கனடாவிற்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் பின்னடைவு ஏற்பட்டதனை அவதானிக்க முடிந்தது.

இந்திய அரசு கனடா நாட்டுக்கான தனது தூதர்களை இந்தியாவிற்கு திருப்பி அழைக்க உத்தரவிட்ட நிலையில், இந்தியாவில் உள்ள கனடா நாட்டுத் தூதர்களையும் வெளியேற உத்தரவிட்டிருந்தது. இரண்டு நாடுகளுக்குமிடையிலான இந்த சர்ச்சை நீடித்தால் இரு நாடுகளினதும் உறவுகள் நீண்டகால தாக்கத்துக்கு உள்ளாகுமென கருதப்படுகின்றது.

### ரஷ்யா– யுக்ரைன் யுத்தம்

ரஷ்யா மற்றும் யுக்ரைன் நாடுகளுக்கு இடையிலான யுத்தம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இந்த யுத்தமானது ரஷ்யாவுக்கும், நேட்டோ (NATO) நாடுகளுக்கும் இடையிலான உறவுகளில் மேலும் விரிசலினை ஏற்படுத்தும் சாத்தியம் தென்படுகின்றது.

ஏவுகணைத் தாக்குதல்கள், பரவலாகக் காணப்படுகின்ற பொதுமக்களுக்கான சேதங்கள் ஆகியவற்றின் காரணமாக இந்த யுத்தத்திற்கு ஒரு தீர்வு காணுமாறு உலக நாடுகளால் அறைகூவல் விடுக்கப்பட்டிருந்தது.

இந்த யுத்தத்தின் காரணமாக ஏற்படுகின்ற பொருளாதாரப் பின்னடைவுகள், உலகப் பணவீக்க அதிகரிப்பு, உணவுப் பற்றாக்குறை ஆகியன உலக நாடுகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளதெனலாம்.

“யுக்ரேன் இந்தப் போரில் அமெரிக்கா கொடுத்திருக்கும் நீண்ட தூரம் சென்று இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கும் ஏவுகணைகளை ரஷ்யாவுக்கு எதிராகப் பயன்படுத்தினால், நாங்கள் அணு ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்” என்ற ரஷ்ய ஜனாதிபதியின் எச்சரிக்கையானது உலக நாடுகளை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது எனலாம்.

கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ரஷ்யா, யுக்ரைனுக்கு எதிராகப் பயன்படுத்தி உள்ளமையானது இந்த போர் இன்னும் நீண்டு செல்வதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

இதேவேளை, ரஷ்யாவுக்கு ஆதரவாக வடகொரிய இராணுவத்தினர் யுக்ரைனுக்கு எதிராக போரிடுவதற்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி நிலைமையை இன்னும் சிக்கலாக்கக் கூடிய தன்மை கொண்டதாகக் காணப்படுகிறது. யுத்தம் காரணமாகப் பெருமளவான மக்கள் அகதிகளாக அயல் நாடுகளுக்குச் செல்கின்றதானது அகதிகள் பிரச்சினையை உருவாக்கும் எனலாம்.

“நான் போர்களைத் தொடுக்கப் போவதில்லை. நடைபெற்றுக் கொண்டிருக்கும் போர்களை நிறுத்தப் போகின்றேன்” என அமெரிக்கத் தேர்தலில் வெற்றி பெற்ற டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ள கூற்றானது உலகில் போர் நிறுத்தத்திற்கான சமிக்ஞையாகத் தென்படுகின்றது. ஆனாலும், அவரது கூற்றுக்குப் பின்னரும் போர்கள் நடைபெற்றுக் கொண்டிருப்பதானது கவலைக்குரிய விடயமாகும்.

### இந்தியா

18ஆவது இந்திய மக்களவை தேர்தலில் பாரதிய ஜனதா கட்சி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வெற்றி பெற்றது. நரேந்திர மோடி மூன்றாவது முறையாக இந்தியாவின் பிரதமரானார்.

### ஐக்கிய அமெரிக்கா

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் குடியரசுக் கட்சி வேட்பாளரான டொனால்டு ட்ரம்ப் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக அமெரிக்காவின் அதிபராகப் பதவியேற்க உள்ளார். அமெரிக்காவின் 47ஆவது அதிபராகும் இவர் தனது தேர்தல் பிரசாரத்தின் பொழுது பொருளாதார சவால்கள், குடியேற்றம் தொடர்பான சீர்திருத்தங்கள், யுக்ரேன் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருதல் போன்ற அம்சங்களை முன்னெடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

### பிரான்ஸ்

பிரான்ஸ் வரலாற்றில் முதன்முறையாக அரசின் மீதான நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்று பிரதமர் மைக்கேல் பார்னியர் தலைமையிலான 91 நாட்களே ஆட்சியிலிருந்த அரசு டிசெம்பர் மாதம் நான்காம் திகதி கவிழ்க்கப்பட்டது.

### ஜேர்மனி

சான்சலர் ஒலாப் ஸ்கால்ஸ் தலைமையிலான ஆளும் கூட்டணியில் ஏற்பட்ட விரிசல் காரணமாக டிசம்பர் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பில் தோல்வி அடைந்தார். 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதியன்று தேர்தல் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஸ்ரீலங்கா

செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவரான அனுரகுமார திசநாயக அறுதிப் பெரும்பான்மை பெற்று வெற்றியீட்டினார்.

### சிரியா

2000ஆம் ஆண்டு முதல் சிரியாவை ஆட்சி செய்து வந்த ஜனாதிபதி பஷர் அல்- அசாத்தின் சர்வாதிகார ஆட்சி டிசெம்பர் மாதம் முடிவுக்கு வந்தது.

இவரது ஆட்சிக்கு எதிராக சுமார் பதினான்கு ஆண்டுகளாக உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்த ஹயாத் தஹ்ரிர் அல்-ஷாம் எனப்படும் ஹெச்.டி.எஸ். இஸ்லாமிய ஆயுதக்குழு தலைமையிலான கிளர்ச்சிப் படையும், சிரியன் தேசிய இராணுவம் என்ற கிளர்ச்சிக் குழுவும், இராணுவம் என்ற கிளர்ச்சிக் குழுவும் இணைந்து நடத்திய போராட்டத்தின் விளைவாக டிசெம்பர் மாதம் எட்டாம் திகதி சிரியாவின் தலைநகரான டமாஸ்கஸ் கிளர்ச்சியாளர்கள் கைவசம் மாறியது.

முன்னாள் ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத்தும், அவரது குடும்பத்தினர் ரஷ்யாவில் தஞ்சம் அடைந்தனர்.

ஆட்சி மாற்றத்துடன் துருக்கி, இஸ்ரேல் போன்ற நாடுகளின் ஊடுருவல் சிரியாவின் சில பகுதிகளில் தென்பட்டது. எதிர்காலத்தில் எவ்வாறான விளைவுகளை இது ஏற்படுத்தும் என்பதனை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## இயற்கை பேரழிவுகள்

### ஜப்பான்

2024ஆம் ஆண்டு புத்தாண்டு பிறந்த தினத்தன்று ஜப்பானின் வடமேற்கு கடற்கரையில் உள்ள நோட்டோ தீபகற்பத்தில் கடுமையான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தில் 200க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். பலர் காயமடைந்தனர்.

### இந்தோனேசியா

மே மாதமளவில் இந்தோனேசியாவின் சுமத்ரா தீவில் உள்ள எரிமலையின் சரிவுகளில் பெய்த கனமழை மற்றும் குளிர்ந்த லாவா மற்றும் சேறு ஆகியவை திடீர் வெள்ளப்பெருக்கைத் தூண்டியதால் பலர் உயிரிழந்ததுடன், பலர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டது.

### பப்புவா நியூ கினி

ஜூன் மாதம் பப்புவா நியூ கினியில் ஏற்பட்ட பயங்கர நிலச்சரிவில் குறைந்தது 2,000 பேர் உயிருடன் மண்ணுக்குள் புதைந்துவிட்டதாக அந்நாட்டு அரசு அறிவித்தது.

### ஐக்கிய அமெரிக்கா

செப்டெம்பர் மாதத்தில் அமெரிக்காவின் வடக்கு கரோலினா மாநிலத்தைத் தாக்கிய ஹெலன் புயல் காரணமாக பலர் உயிரிழந்ததுடன், புளோரிடா உட்பட ஏழு மாகாணங்கள் பேரழிவை சந்தித்தன.

### மொரோக்கா

ஒக்டோபர் மாதத்தில் சகாரா பாலைவனத்தில் ஏற்பட்ட மழை வீழ்ச்சியின் காரணமாகப் பாலைவனத்தில் ஒரு சில பகுதிகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. இந்தக் கடும் மழைப் பொழிவுக்குப் பிறகு, ஐம்பது ஆண்டுகளாக வற்றியிருந்த ‘இரிக்கி’ ஏரி தண்ணீரால் நிரம்பியதாக ‘ஏபி’ செய்தி நிறுவனம் தெரிவித்தது.

### ஸ்பெயின்

ஒக்டோபர் மாதத்தில் ஸ்பெயின் நாட்டின் கிழக்குப் பகுதியில் உள்ள வாலென்சியாவில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளத்தில் சிக்கி நூற்றுக்கு மேற்பட்டோர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

### பிலிப்பைன்ஸ்

ஒக்டோபர் மாதத்தில் பிலிப்பைன்ஸின் வடகிழக்கில் தாக்கிய டிராமி புயல் மற்றும் வெள்ளத்தினால் பல பகுதிகள் நீரில் மூழ்கியதோடு பலர் உயிரிழந்தனர்.

### வரலாறு காணாத வெப்பநிலை

2024ஆம் ஆண்டு அதிக வெப்பமான காலப் பகுதியாகக் கருதப்பட்டது. 2023ஆம் ஆண்டு தொடங்கி சுமார் 13 மாதங்களுக்கு இந்த வெப்பம் நீடித்தது. உலகின் அதிக வெப்பமான நாளாக ஜூலை மாதம் 22ஆம் திகதி காணப்பட்டது.

### விமான விபத்துக்கள்

தாய்லாந்தில் இருந்து பயணித்த விமானமானது தென்கொரியாவிலுள்ள முவான் சர்வதேச விமான நிலையத்தின் ஓடு பாதையில் இருந்து விலகிச் சென்றதால் அதில் பயணித்த 179 பயணிகளும் இந்த வருட இறுதி வாரத்தில் உயிரிழந்தனர்.

இதுபோல, அஜர்பைஜானில் இருந்து ரஷ்யா நோக்கிப் புறப்பட்ட பயணிகள் விமானமானது கசகஸ்தானில் உள்ள அத்தௌ நகர விமான நிலையம் அருகே தரையில் மோதி வெடித்ததனால் அதில் பயணித்த 38 பேரும் மரணம் அடைந்தனர்.

இந்த இரண்டு சம்பவங்களும் இந்த வருட இறுதியில் நடைபெற்றதானது ஒரு சோக நிகழ்வாகும்.

### செயற்கை நுண்ணறிவு

செயற்கை நுண்ணறிவானது இந்த ஆண்டு தலைப்புச் செய்திகளில் முன்னணியில் இருந்தது. 2024ஆம் ஆண்டில், குரல் குளோனிங், இமேஜ் உருவாக்கம், டிரான்ஸ்கிரைபிங், மியூசிக் மேக்கிங் மற்றும் யதார்த்தமான வீடியோ உருவாக்கம் போன்ற திறன்களுடன், செயற்கை நுண்ணறிவு கண்டுபிடிப்பானது முக்கியமாக மனிதரைப் போலவே வாடிக்கையாளருடன் பேசுவதற்கான கம்ப்யூட்டர் செயற்பாடுகளை (Chatbot) மையமாகக் கொண்டதாக அமைந்திருந்தது.

அமெரிக்காவும், சீனாவும் செயற்கை நுண்ணறிவு ஆராய்ச்சியில் ஆதிக்கம் செலுத்தும் அதே வேளை,

ஐரோப்பா நெறிமுறை சார்ந்த விடயங்களிலும் மற்றும் சாத்தியமான துஷ்பிரயோகங்களை நிவர்த்தி செய்ய கடுமையான விதிமுறைகளை மேற்கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

தொழில்நுட்ப போட்டியானது புவிசார் அரசியலில் பதற்றங்களை ஏற்படுத்துவதோடு, செயற்கை நுண்ணறிவுத் திறன்கள் பாதுகாப்பு தந்திரோபாயங்கள், சைபர் பாதுகாப்புக் கொள்கைகள் மற்றும் பொருளாதாரப் போட்டிகள் ஆகியவற்றில் தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியது.

2024ஆம் ஆண்டானது ஒரு சவால் மிக்க ஆண்டாகத் தென்பட்டது.

மனிதகுலத்தின் பின்னடைவு, தொடர்ச்சியான யுத்தங்கள், அகதிகள் பிரச்சினை, பெருமளவான சிறுவர்களின் மரணங்கள், செயற்கை நுண்ணறிவின் செல்வாக்கு, காலநிலை மாற்றம் போன்றவைகள் சவால் மிக்கவைகளாகக் காணப்பட்டன.

சிக்கல் மிகுந்த இன்றைய உலகப் போக்கின் காரணமாகப் பொறுப்புக் கூறக்கூடிய நிர்வாகம், நிலையான நடைமுறைகள் மற்றும் நெறிமுறை தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு ஆகியவற்றின் அவசியத்தை இது வலியுறுத்துகின்றது.



எகிப்து

# சுறா தாக்கியதில் சுற்றுலாப் பயணி பலி

எகிப்து கடல் பகுதியில், நீச்சலடிக்க அனுமதிக்கப்பட்ட பகுதியை மீறிச் சென்ற சுற்றுலாப் பயணி ஒருவர், ஆழ்கடல் பகுதிக்குள் சென்றபோது, சுறா தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

எகிப்து நாட்டின் மார்சா ஆலம் பகுதியில், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் கடற்கரை அமைந்துள்ளது. இந்த கடல் பகுதியானது பவளப் பாறைகள், கடல் வாழ் உயிரினங்கள் மற்றும் பீச் ஆகியவற்றுக்காகப் புகழ் பெற்றது. இந்த பகுதிக்கு வந்த சுற்றுலாப் பயணிகளில் ஒருவர், தடை செய்யப்பட்ட பகுதிக்குள் அத்துமீறி நுழைந்துள்ளார்.

இதன்போது, அவரை சுறா ஒன்று தாக்கியுள்ளது. இந்த சம்பவத்தில் பலத்த காயமடைந்த அவர் உயிரிழந்துள்ளார்.

இதுபற்றி அந்நாட்டு அமைச்சகம் வெளியிட்டு உள்ள செய்தியில், வடக்கு மார்சா ஆலம் கடல் பகுதியில் தடை செய்யப்பட்ட பகுதிக்குள் சுற்றுலாப் பயணி நுழைந்து உள்ளார். நீச்சலடிக்க அனுமதிக்கப்பட்ட பகுதியை மீறிச் சென்ற அவர், ஆழ்கடல் பகுதிக்குள் சென்றபோது, சுறா தாக்குதலுக்கு ஆளானார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், அவர் எந்த நாட்டை சேர்ந்த நபர் என்ற விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை. இதனை தொடர்ந்து அந்த பகுதிக்கு செல்ல திங்கட்கிழமை(30) முதல் 2 நாட்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.


கடைசியாக 2023ஆம் ஆண்டு ஜூனில், மார்சா ஆலம் கடலோர பகுதிக்கு வடக்கே அமைந்த செங்கடல் பகுதியில் ஹர்காடா என்ற இடத்தில் ரஷ்ய நாட்டு சுற்றுலா பயணி ஒருவரை புலி சுறா தாக்கியது. இதில் அவர் உயிரிழந்தார்.

கடந்த மாதம் அதே பகுதியில், சுற்றுலா படகு ஒன்று கவிழ்ந்ததில் 4 பேர் உயிரிழந்தனர். 7 பேர் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா

## அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி

# ஜிம்மி கார்ட்டர் காலமானார்



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் தனது 100ஆவது வயதில் ஞாயிற்றுக்கிழமை (29) காலமானார்.

அமெரிக்காவின் 39ஆவது ஜனாதிபதியாகப் பதவி வகித்த ஜிம்மி கார்ட்டர், 1977 முதல் 1981ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் ஜனாதிபதியாகச் செயற்பட்ட அவர், வயது முதிர்வு மற்றும் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்ட நிலையில் காலமாகியுள்ளார்.

ஜார்ஜியா மாகாணம் பலின்ஸ் நகரில் உள்ள அவரது வீட்டில் ஜிம்மி காலமானதாக குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர்.

தனது பதவிக் காலத்துக்குப் பின்னர் மற்ற அமெரிக்க ஜனாதிபதிகளை விட நீண்ட காலம் வாழ்ந்துள்ளார்.


மேலும், கடந்த 2002ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை ஜிம்மி கார்ட்டர் வென்றுள்ளார்.

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி ஜிம்மி கார்ட்டர் மறைவுக்கு பல்வேறு தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

தமிழகம்

## அண்ணா பல்கலைக்கழகத்தில்

# பாதுகாப்பு அதிகரிப்பு




சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில், மாணவிகளின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக 16 பெண் பேராசிரியர்கள் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

மேலும், வளாகத்தில் புதிதாக 30 சிசிடிவி கமெராக்கள் பொருத்தப்பட்டு, கூடுதலாக 40 பாதுகாவலர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

சென்னை கிண்டியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில், மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டார். இதையடுத்து சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வெளியாகி சர்ச்சையானதால் அண்ணா பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன.

அதன்படி, பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது வெளியாட்கள் எளிதில் செல்ல முடியாதபடி சோதனைகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. மேலும், தொடர் நடவடிக்கைகளுக்காக பல்வேறு கண்காணிப்புக் குழுக்களும் அமைக்கப்படவுள்ளன.

இந்நிலையில், அண்ணா பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவிகள் நலன் கருதியும், அவர்கள் பாதுகாப்பை உறுதி செய்யவும் 16 பெண் பேராசிரியர்கள் கொண்ட கண்காணிப்புக் குழுவைப் பல்கலைக்கழக ஒருங்கிணைப்புக்குழு அமைத்துள்ளது.

இந்தக் குழுவில் துறைத் தலைவர்கள், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் இடம் பெற்றுள்ளனர்.

இதற்கிடையே, பல்கலைக்கழக வளாகத்தில் தற்போது 140 பாதுகாவலர்கள் ரோந்து பணியில் பணிபுரிந்து வருகின்றனர். அத்துடன், கூடுதலாக 40 பாதுகாவலர்கள் பணியமர்த்தப்படவுள்ளனர்.



## இலங்கைக்கெதிரான

# தொடரைக் கைப்பற்றியது நியூசிலாந்து

இலங்கைக்கெதிரான இருபதுக்கு- 20 சர்வதேசப் போட்டித் தொடரை நியூசிலாந்து கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை ஏற்கெனவே வென்ற நியூசிலாந்து, மௌன்ட் மகட்டரேயில் திங்கட்கிழமை(30) நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் வென்றமையைத் தொடர்ந்து இன்னும் ஒரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றுவதை உறுதி செய்தது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையின் அணித்தலைவர் சரித் அசலங்க தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடுமென அறிவித்தார்.

அந்தவகையில், முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து, மார்க் சப்மனின் 42 (29), மிற்செல் ஹேயின் ஆட்டமிழக்காத 41 (19), டிம் றொபின்சனின் 41 (34), கிளென் பிலிப்ஸின் 23 (16), டரைல் மிற்செல்லின் 18 (15) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 5 விக்கெட்டுகளை இழந்து 186 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், வனிது ஹசரங்க 4-0-28-2, நுவான் துஷார 4-0-25-1 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தார்.

பதிலுக்கு 187 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, அணித்தலைவர் மிற்செல் சான்ட்னெர் (2), ஜேக்கப் டஃபி (4), மிஷெல் பிறேஸ்வெல், மற் ஹென்றி (2), ஸகரி போக்ஸிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 141 ஓட்டங்களையே பெற்று 45 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் குசல் பெரேரா 48 (35), பதும் நிஸங்க 37 (28) ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக ஹே தெரிவானார்.



## சிம்பாப்வேக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# ஆப்கானிஸ்தான் 515/3


சிம்பாப்வேக்கெதிரான முதலாவது டெஸ்டின் நான்காம் நாள் முடிவில் தமது முதலாவது இனிங்ஸில் 3 விக்கெட்டுகளை இழந்து 515 ஓட்டங்களை ஆப்கானிஸ்தான் பெற்றுள்ளது.

இரண்டு போட்டிகளைக் கொண்ட இத்தொடரில், புலவாயோவில் வியாழக்கிழமை (26) ஆரம்பித்த இப்போட்டியின் நான்காம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 2 விக்கெட்டுகளை இழந்து 425 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த ஆப்கானிஸ்தான் ஆரம்பத்திலேயே ரஹ்மத் ஷாவை 234 ஓட்டங்களுக்கு நியூமன் நையம்ஹுரியிடம் இழந்தது.

பின்னர் அணித்தலைவர் ஹஷ்மதுல்லாஹ் ஷகிடி, அஃப்ஸர் ஸஸாயின் இணைப்பில் ஓட்டங்களை ஆப்கானிஸ்தான் சேகரித்திருந்த நிலையில் மழை குறுக்கிட்ட நிலையில் நாள் முடிவுக்கு வரும்போது ஷகிடி ஆட்டமிழக்காமல் 179 ஓட்டங்களையும், ஸஸாய் 46 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர்.

## இத்தாலிய சீரி ஏ தொடர்

# சமநிலையில் ஜுவென்டஸ் பியொரென்டினா போட்டி



இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், தமது மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை(29) நடைபெற்ற பியொரென்டினாவுடனான போட்டியை 2-2 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது.

ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் கெப்ஹ்ரென் துராம் பெற்றதோடு, பியொரென்டினா சார்பாக மொய்ஸே கீன், றிக்கார்டோ சொட்டில் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, தமது மைதானத்தில் திங்கட்கிழமை(30) நடைபெற்ற றோமாவுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஏ.சி. மிலன் சமப்படுத்தியது. மிலன் சார்பாகப் பெறப்பட்ட கோலை டிஜ்ஜனி றெஜின்டர்ஸ் பெற்றதோடு, றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை போலோ டிபாலா பெற்றிருந்தார்.

## நான்காவது டெஸ்டில்

# இந்தியாவை வீழ்த்திய அவுஸ்திரேலியா

இந்தியாவுக்கெதிரான நான்காவது டெஸ்டில் அவுஸ்திரேலியா வென்றது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் வென்றதோடு, மூன்றாவது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்த நிலையில், மெல்பேணில் வியாழக்கிழமை(26) ஆரம்பித்த நான்காவது போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை தமது இரண்டாவது இனிங்ஸில் 9 விக்கெட்டுகளை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த அவுஸ்திரேலியா 41 ஓட்டங்களுடன் நேதன் லையனை இழக்க சகல விக்கெட்டுகளையும் இழந்து 234 ஓட்டங்களையே பெற்றது.

பதிலுக்கு 340 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா, அணித்தலைவர் பற் கமின்ஸ் (3), ஸ்கொட் போலண்ட் (3), நேதன் லையன் (2), ட்ரெவிஸ் ஹெட், மிற்செல் ஸ்டார்க்கிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 155 ஓட்டங்களையே பெற்று 184 ஓட்டங்களால் தோல்வியடைந்தது. துடுப்பாட்டத்தில் யஷஸ்வி ஜைஸ்வால் 84, றிஷப் பண்ட் 30 ஓட்டங்களைப் பெற்றனர்.

இப்போட்டியின் நாயகனாக கமின்ஸ் தெரிவானார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 31 டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.